முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1435

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**03.09.2023**,ஞாயிற்றுகிழமை

1. ஓங்கார மகா சூட்சுமமே
ஓங்காரக்குடில் படைத்த மாதவராஜனே
ஓங்காரமாய் உலகுக்கு அற்புதங்கள் நிகழ்த்த
ஓங்காரன் என் வடிவாகவே வந்த அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி ஆற்றல்பட அரங்கனுக்கு நித்தம்நித்தம்
(சோபகிருது வருடம் ஆவணி மாதம் 17 ம் நாள், 03.09.2023 ஞாயிற்றுகிழமை)
மாற்றங்களையும் மகாசக்திகளையும் ஆறுமுகன் யான் வழங்கிவர
மண்ணுலகில் அரங்கன் தொடர்பு கொண்ட மக்களுக்கு
3. மாற்றமும் மறுமை வெல்லுகின்ற மகாசக்தியும் கிட்ட நேரும்
நேர்மை கொண்டு அரங்கன் தொடர்போடு
நிலவுலகில் அன்னதான சேவையாற்றி வரமென சன்மார்க்க
நெறியை விட்டகலா உலகோர் தொடர்ந்துவர
4. வையகத்தில் எங்கும் மாற்றம்
அரங்கன் அவதார நோக்கமாக
ஆற்றல்பட நடந்தேறி இனிதே
அகிலம் சர்வபாதுகாப்பும்
5. பாதுகாப்போடு ஞானச்சித்தர் காலமாகவும்
பழுதின்றி ஞானிகள் ஆட்சிக் காலமாகவும்
வகைபட சடுதி மாற்றம் நிகழக்கூடும்
வையகத்தில் அரங்கன் கொள்கை மூலம் இந்த அற்புதம்
6. அற்புதம் ஆறுமுகன் யானே தலைமை ஏற்று நடத்த
அதிசயம் உலகமெல்லாம் நடந்தேறி
ஏற்புகொண்ட மக்கள் வழி இந்த பேருலகில்
இறங்கி ஆறுமுகன் யான் ஆக்கம் தருவேன்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–